www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

TELO

# Thamil Eelam Liberation Organization

தலைமையகம் : தமிழ் ஈழம்　　Head Quarters: Thamil Eelam

## தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எதிர்ப்புரட்சி சக்திகள்.

தமிழ் பேசும் மக்களை ஒடுக்கியும் சிங்கள மக்களைச் சுரண்டியும் தனது அரசியல் இருக்கையைத் தக்கவைத்திருக்கும் இனவாத சிறீ லங்கா அரசிற்கெதிரானதோர் புரட்சிகர போராட்ட வடிவமே தமிழ்பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமாகும். இப் புரட்சிகரப் போராட்டத்தில் வரலாற்றுப் போக்கு அடக்கப்பட்டிருக்கும் சிங்கள மக்களை விழித்தெழ ~~வெளித்தள்ள~~ நிர்ப்பந்திக்கும். இவ் விழிப்புணர்ச்சியானது சிங்கள இனவாதத்திற்கெதிரான தொன்றாக, இவ் இனவாத அரசுகளையே நிர்மூலம் செய்யும் புரட்சிகர சக்திகளாக தோற்றம் பெறும் என்பது மறுப்பதற்கில்லை. இதன் அடிப்படையில் சிங்களப் பொதுமக்கள் மீது தொடர்ச்சியாக நடாத்தப்பட்டுவரும் தாக்குதல்களை நாம் பலமாகக் கண்டிப்பதுடன், எமது இலக்குகள் இனவாத அரசும் அதன் இயந்திரங்களுமாகவே இருத்தல் வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

'போராளிகள் அமைப்புக்கள் ஒன்றுபட்டன. போராளிகள் மத்தியில் தோழமையுணர்வு மேலோங்குகின்றது' என நினைத்த தமிழ் பேசும் மக்கள், இனவாத அரசின் இயந்திர இலக்குகள் சிதறும் என எதிர்பார்த்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக போராளிகள் மத்தியில் உருவாகும் என எதிர்பார்த்த தோழமையுணர்வே மக்களை புளங்காகிதம் அடையச்செய்தது. எத்தனையோ சதி முயற்சிகளை சந்தித்த எமது ஸ்தாபனம் மக்களின் எண்ணப்பாடுகளைக் கேள்விக்குறியாக்க முயலவில்லை. மாறாக எமது ஸ்தாபனம் மீது நடாத்தப்பட்ட உத்தியோகபூர்வ சதி முயற்சிகளை முற்று முழுதாக மறந்து புரட்சிகரப் போராட்டத்தின் நிமித்தம் பிற அமைப்புகளுடன் தோழமையுணர்வை ஏற்படுத்த முற்பட்டோம். இம் முயற்சியின் வெளிப்பாடே சுதுமலையில் இடம்பெற்றது. இச்சம்பவத்தின் போது அரச விமானப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளை, எமது தோழர்கள் சக போராளிகளாகக் கருதியதன் காரணமாக விமானப் படையினரின் சுற்றிவளைப்பை உடைத்து எட்டு (8) விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை மீட்டதுடன், இறந்த விடுதலைப்புலி உறுப்பினரின் சடலத்தையும் மீட்டு ஒப்படைத்தனர். இதற்கு நன்றி தெரிவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் குழு அறிக்கையும் விடுத்திருந்தது. இதேபோல் அரச இராணுவத்தினர் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் ஊடுருவ முற்பட்ட போதெல்லாம் பிற அமைப்புகளுடன் இணைந்து தடுத்து நிறுத்துவதில் முன்னின்று செயற்பட்டுள்ளோம்.

இவ் வெதிர்த்தாக்குதல்களின் காரணமாக பலவீனமடைந்த சிறீ லங்கா அரசு தன்னை ஆசுவாசப்படுத்துவதற்கான கால அவகாசத்தைத் தேட முற்பட்டது. இதன் காரணமாகவே ஒருதலைப் பட்சமான போர் நிறுத்தமொன்றை சிறீ லங்கா அரசு 1985 ம் ஆண்டு அறிவித்ததுடன் பேச்சு வார்த்தையென்ற போலி நாடகத்தை வலுக்கட்டாயமாக வருந்தியழைத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறு சிறீ லங்கா அரசே நிலை தடுமாறும் வண்ணம் அமைந்திருந்த எமது இணைந்த இராணுவ யுக்திகளைச் சிதைப்பதே சிறீ லங்கா அரசின் முக்கிய நோக்கமாக இருந்தது. இவ் இனவாத அரசின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு வெளிச் சக்திகள் தமிழீழ விடுதலைப் புலிகளை உந்தியதால் வெற்றிகரமான சிறிய யுத்தங்களை நடாத்த தமிழீழ விடுதலைப்புலிகள் முற்பட்டனர். இதனால் விடுதலை இயக்கங்களுக்கிடையிலான கேவலமான யுத்தங்களை நிராகரிக்கும் நாமும் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டோம். இதன் காரணமாக 72 புலிகள் இறந்ததுடன், எமது தலைவர் தோழர் சிறீ சபாரத்தினம் அவர்கள் உட்பட 156 தோழர்களை எமது ஸ்தாபனம் இழந்தது.

ஆனாலும் எம் ஸ்தாபனம் தன்னை மீளக் கட்டியமைத்ததுடன் இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அரசியல் வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தியுள்ளது. இவ்வாறான அரசியல் வேலைத்திட்டங்கள் நாளைய இயக்க மோதல்களைத் தடுத்து நிறுத்தும் என்ற நம்பிக்கையுடனேயே நடாத்தப்படுகின்றன.

ஆரம்பத்தில் தனிமனித கொலையாக ஆரம்பித்து காலப்போக்கில் விடுதலை ஸ்தாபனங்களின் மீதான தடை உத்தரவு செயற்பாடுகள், இன்று எம் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைத் துப்பாக்கி முனையில் தூக்கிலிட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் விடுதலையைக் கருத்திற் கொண்ட ஸ்தாபனங்கள் அடக்கப்பட்டுள்ள எம்மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் காக்கவும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இந் நிலை நீடிக்கும் அதேசமயம், இனவெறி அரசானது பரவலான இராணுவத்தாக்குதல்களை தமிழ் பேசும் மக்கள் வாழும் இடமெங்கும் விரிவுபடுத்தி வருகின்றது. இந் நிலையில் இன்று மக்கள் விடுதலைக்காக முனைப்புடன் செயலாற்றும் சக்திகள் ஒன்றிணைந்து சிறீ லங்கா இனவெறி அரசையும் எதிர்ப் புரட்சிகர சக்திகளையும் உரித்துக் காட்டுவதுடன் தமிழ் பேசும் மக்களை இவ் எதிர்ப்புரட்சிகர சக்திகளுக்கெதிரான போராட்டத் தயாரிப்பில் ஒருங்கமைப்பதும் முக்கிய தேவையாகும்.

சிந்தித்துப் போராடுவோம்!!

சகல அடக்குமுறைகளையும்
உடைத்தெறிந்து போராடுவோம்...!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்